OCTOBER 2024

www.balamandir.org

மலர்-1 இதழ்-7

MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

பால மந்திரில் நிறுவனர் தின விழா:

எங்கள் நிறுவனர் பற்றி தெரிந்துகொள்வோம்:









"மஞ்சும்மா" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் திருமதி எஸ். மஞ்சுபாஷினி அவர்கள் பால மந்திரின் நிறுவனர். மகாத்மா காந்தியின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட இவர், 1949 இல் ஸ்ரீ காமராஜருடன் இணைந்து பால மந்திரை நிறுவினார். பால மந்திர் ஒரு சிறிய அமைப்பாகத் தொடங்கி, இப்போது ஆலமரம் போல வளர்ந்திருக்கிறது. அவருடைய முடிவுகள் எப்போதும் குழந்தைகளின் சிறந்த நலனை மட்டுமே கருத்தில் கொண்டிருந்தன. அவரது தைரியமும் அர்ப்பணிப்பும் நம் அனைவருக்கும் முன்மாதிரியாக இருக்கிறது. பால மந்திர் என்றென்றும், அவரது அர்ப்பணிப்பு மற்றும் சேவைகளுக்கு தலைவணங்குகிறது!

நிறுவனர் தின விழா கொண்டாட்டம்:

பால மந்திர் குழந்தைகள் இல்லத்தில் 28/09/2024 அன்று நிறுவனர் தினமானது கொண்டாடப்பட்டது. குழந்தைகள் நல மற்றும் குழந்தைகள் மருத்துவமனை இயக்குனர் பேராசிரியர் ரேமா சந்திரமோகன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கொண்டாட்டத்தில் திருமதி எஸ்.மஞ்சிபாஷினியின் வாழ்க்கை மற்றும் தியாகங்களை முன்னிலைப்படுத்தும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



உங்கள் சமூகப் பணியாளரைப் பற்றித் திறந்து கொள்ளுங்கள்.



திருமதி. ஆர்த்தி பவுன்ராஜ் பால மந்திர் கின்ஷிப் கேர் திட்டத்தில் 2023-ல் சமூக பணியாளராக சேர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 57 குடும்பங்களை சேர்ந்த 119 குழந்தைகளை கவனித்து வருகிறார். இவர் புவியியலில் முதுகலை பட்டமும் கல்வியியலில் இளங்கலை பட்டமும் பெற்றுள்ளார். இவர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சித் திட்டத்தில் பணியாற்றிய அனுபவம் உடையவர். அதுமட்டுமின்றி விவசாயத்தில் அதிக ஈடுபாடும் ஆர்வமும் கொண்டவர்.



செப்டம்பர் 2024 நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் 831 குடும்பங்களும் 1461 குழந்தைகளும் கின்ஷிப் கேர் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். இவர்கள் அனைவரும் பால மந்திரின் பல்வேறு சேவைகளால் பயனடைந்து வருகின்றனர்.



கின்ஷிப் கேர் - நிகழ்வுகள்/முகாம்கள்:

பயனாளிகள் நிர்வாகத்தை சந்திக்கவும், பால மந்திர் பற்றி தெரிந்து கொள்ளவும் ஒரு தளமாக அமையும் வகையில் ஆண்டுதோறும் கின்ஷிப் கேர் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு, பாலமந்திரின் 75-வது ஆண்டைக் கொண்டாடும் வகையில், கின்ஷிப் கேர் நிகழ்வுகள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்படுகிறது. செப்டம்பர் மாதத்தில் திருவண்ணாமலை மற்றும் செங்கல்பட்டில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

KINSHIP CARE - திருவண்ணாமலை









திருவண்ணாமலையில் கின்ஷிப் கேர் நிகழ்வு 15/09/2024 அன்று குமரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 69 குழந்தைகள் பங்கேற்றனர். KC திட்டத்தின் பயனாளிகள் பால மந்திரில் நிர்வாக உறுப்பினர் மற்றும் சமூக பணியாளர்களை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஒரு தாய் குறிப்பாக பால மந்திரை தனது தாய் வீடு என்று குறிப்பிட்டார், ஏனெனில் அவருக்கு எப்போதும் பால மந்திர் ஒரு குடும்பத்தினர் போன்று ஆதரவை வழங்குகின்றனர் என குறிப்பிட்டார். பால மந்திரைச் சேர்ந்த திரு.ரவி மற்றும் திருமதி. அகிலா ஆகியோர் 10 ஆம் வகுப்பு குழந்தைகளுடன் கலந்துரையாடினர். மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு மருத்துவர்கள் பங்கேற்றனர். விவேகானந்தா மிஷனைச் சேர்ந்த திருமதி. நிவேதிதா கின்ஷிப் கேர் குழுவை சந்தித்து 'சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்' என்ற புத்தகத்தை அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கினார்.

ஈஷா நர்சரியின் உதவியுடன் அனைத்து குழந்தைகளுக்கும் கொய்யா மற்றும் நெல்லிக்காய் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு பயனாளிகள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது. குழந்தைகளுக்காக வேடிக்கை விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து நிகழ்ச்சிகளிலும் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பங்கேற்றனர்!



வேலூரில் கின்ஷிப் கேர் நிகழ்வு அக்டோபர் 2024 இல் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முகாம் பற்றிய விபரங்கள் அடுத்த செய்திமடலில் காணலாம்.



KINSHIPCARE - செங்கல்பட்டு






செங்கல்பட்டில், திருக்கழுக்குன்றம் அன்னை தெரசா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 29/9/2024 அன்று கின்ஷிப் கேர் முகாம் நடைபெற்றது. பால மந்திர் நிர்வாகத்தைச் சேர்ந்த அனைவரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இதில், 33 குடும்பங்களைச் சேர்ந்த 66 குழந்தைகள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில், 2 டாக்டர்கள், 3 செவிலியர்கள் பங்கேற்றனர். சில குழந்தைகளுக்கு இரத்த சோகை இருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டன. 6 குழந்தைகளுக்கு தொடர் கண்காணிப்பு தேவைப்பட்டுகிறது.

பால மந்திர் நிர்வாகத்தை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு பெற்றோருக்கு கிடைத்தது. திரு. பி.நடராஜன் 10-ம் வகுப்பு படிக்கும் குழந்தைகளுடன் கலந்துரையாடினார். அவர் குழந்தைகளை கடினமாகப் படிக்கவும், உயர்ந்த இலக்கை அடையவும் ஊக்குவித்தார்.






பால மந்திரில் இருந்து ஆலோசகர் திருமதி.சுஜாதா அவர்கள் 21 பெற்றோர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசினார். குழந்தைகள் தங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இது அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு வண்ணமயமான நாளாக அமைந்தது.

பெற்றோருக்கான பகுதி - PARENTS' CORNER

- குழந்தைகளின் ஒவ்வொரு முயற்சிகளைக் கவனித்து அவற்றைப் பாராட்ட வேண்டும். அவ்வாறு பாராட்டும் போது குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடன் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார்கள். அது அவர்களின் நம்பிக்கையையும் சுயமரியாதையையும் அதிகரிக்க வழிவகுக்கும்.
- குழந்தைகள் தோல்வியை சந்திக்கும் போது அவர்களுக்கு ஆதரவு தரும் வலுவான தூணாக இருங்கள். குறை கூறுவதை விட, குழந்தைகள் தோல்வியை சந்திக்கும் போது அவர்களுடன் துணையாக இருந்து ஊக்குவித்தால் அவர்கள் புதிய ஆற்றலுடன் மேலும் தொடர முயற்சி செய்வார்கள்.

கோயம்புத்தூர் மையத்திற்கான ஆலோசனை சேவைகள்:

வாழ்க்கையில் ஏற்படும் சில கடினமான சூழலை கையாள்வதற்கு சில சமயங்களில் நமக்கு அறிவு சார்ந்த அறிவுரைகளும் உதவிகளும் தேவைப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் நாம் ஒரு ஆலோசகரிடம் இருந்து உதவியைப் பெறலாம்.
இப்போது புதிதாக கோயம்புத்தூர் மையத்திலும் இந்த ஆலோசனை திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மையத்தை சார்ந்த மாவட்டங்களில் உள்ள அனைத்து பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் இதன் மூலம் பயனடையலாம்.

புதிய வகுப்புகள்

Happy Reading Foundation

எந்த ஒரு மொழிக்கும் அடித்தளம் அதன் அடிப்படை தான் அதனை வலுப்படுத்தும் வகையில் இரு மையங்களிலும் 2 மற்றும் 3 ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளுக்காக ஹேப்பி ரீடிங் ஃபவுண்டேஷன் வகுப்புகள் புதிதாக தொடங்கியுள்ளது. குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் இந்த வகுப்புகளில் பங்கேற்று வருகின்றனர்.

ஆஹா குரு அட்வான்ஸ் கோச்சிங்:

ஏழாம் வகுப்பில் அதிக செயல்திறன் மற்றும் படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பால மந்திர் ஆஹா குருவுடன் ஒன்றிணைந்து அட்வான்ஸ் கோச்சிங் வகுப்புகளை தொடங்கியுள்ளது. இந்த வகுப்புகள் குழந்தைகள் மேற்படிப்பிற்க்கான நுழைவு தேர்வுகளை எதிர்கொள்ள உதவியாக இருக்கும் . இது ஒரு சுய கற்றல் தளமாகும், குழந்தைகள் தானாகவே முன்வந்து கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு தானாக கற்றுக் கொள்ளும் போது குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்க்க ஆஹா குருவின் வழிகாட்டியாளர் உதவிக்கு இருப்பார். இந்த குழந்தைகளுக்கு ஆஹா குருவின் தளத்தை எளிதாக பயன்படுத்த மடிக்கணினி மற்றும் Tabs பால மந்திரால் வழங்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இந்த பாடங்களை தவறாமல் பயிற்சி செய்ய ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகள் மடிக்கணினி மற்றும் டேப்களை மிகுந்த கவனத்துடன் கையாளுவதை உறுதி செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வரும் மாதங்களில் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் இதேபோன்ற வகுப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன.

YOUNG ACHIEVERS



கார்த்தி - (காஞ்சிபுரம்) கராத்தே போட்டி மஞ்சள் பெல்ட்.



ஆதிக்ஷயா - (காஞ்சிபுரம்) ஷட்டில்காக் மண்டல அளவிலான தங்கப்பதக்கம்.



கார்த்திகா (காஞ்சிபுரம்) கராத்தே போட்டி மஞ்சள் பெல்ட்.



தன்ஷிகா - (காஞ்சிபுரம்) அபாகஸ் போட்டியில் தங்கப்பதக்கம்.



வினிதா-(சென்னை) 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 3-ம் இடம்



கனிஷ்கா - (திருவள்ளூர்) வட்டார அளவிலான ஆங்கில பேச்சுப் போட்டியில் முதலிடம்.



ஹரிணி - (சேலம்) சதுரங்க போட்டி மாவட்ட அளவில் 14வது இடம்.



ப்ரிஸ்கில்லா - (காஞ்சிபுரம்) பேச்சுப்போட்டி.



ஸ்ரீமதி - (வேலூர்) ஸ்குவாட் சிலம்பம் உலக சாதனை

YOUNG ACHIEVERS



திருக்குமரன்- (திருவள்ளூர்) பேச்சுப்போட்டி.



மே. மோ. குகேஷ் (நாமக்கல்) ஆங்கில கையெழுத்துப் போட்டியில் முதலிடம்



பூஜா- (கோயம்புத்தூர்) பரதநாட்டியத்தில் வ்ரிக்ஷா புத்தகம் உலக சாதனை.



வனிதா -(சென்னை) 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 2-ம் இடம்.



ஆதிக்ஷயா - (காஞ்சிபுரம்) மாவட்ட அளவிலான ஷட்டில்காக் போட்டி.



ஜீவிதா - (காஞ்சிபுரம்) பேச்சுப்போட்டி.



திவாகர் - (வேலூர்) 2000 ஸ்குவாட் சிலம்பம் உலக சாதனை.

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!